முத்துபாண்டி வைத்தியரின்

மாந்திரீக கையேடு

ஹனுமான், வாராகி, உச்சிஷ்ட கணபதியின் தந்திரங்கள் அடங்கிய இலவச நூல்

முத்துகிருஷ்ணன் .S

SPIRITUAL WORLD ORGANIZATION

ஹனுமான் தந்திரங்கள்

1.ஸ்ரீ ஹனுமத் சுலோகம் :-

அசாத்ய சாதக ஸ்வாமிந் |
அசாத்யம் தவகிம்வத |
ராம தூத க்ருபாசிந்தோ |
மத் கார்யம் சாதய ப்ரபோ|

எந்த ஒரு காரியம் துவங்கும் முன்பும் இந்த ஸ்லோகத்தை மூன்று தடவை கூறி ஆஞ்சநேயரை வணங்கி வேண்டிய பின்னர் துவங்க சிறப்பாக முடியும். ஏற்கனவே துவங்கிய வேலை பாதியில் முடிவடையாமல் நின்றால் செவ்வாய்க்கிழமை அன்று ஸ்ரீ ஹனுமன் ஆலயம் சென்று அவருக்கு வெற்றிலை மாலை சாற்றி அமர்ந்து இந்த ஸ்லோகத்தை 27 தடவை ஜெபித்து வேண்டிக்கொள்ள தடைபட்ட காரியம் விரைவில் முடியும் சூழல் உருவாகும்.

2.வியாதிகள்,எதிரிகள் நீங்க ,வசீகரம் தரும் மந்திரம்

ஓம் நமோ ஹனுமதே ருத்ராவதாராய |
சர்வ சத்ரு சம்ஹாரணாய சர்வ ரோக ஹராய |
சர்வ வசீகரணாய ராமதூதாய ஸ்வாஹா ||

3.எல்லா ஆபத்துக்களில் இருந்தும் விடுபட :-

ஓம் நமோ ஹனுமதே ருத்ராவதாராய |
ஆத்யாத்மிகாதி தெய்வீகாதி

பௌதீக தாபத்ரய நிவாரணாய| ராமதூதாய ஸ்வாஹா ||

உங்களுக்கு படுபட்சி இல்லாத நல்ல நாளாகத் தேர்ந்தெடுத்து 108 தடவை இம்மந்திரம் ஜெபித்து கையில் ரக்ஷை கட்டிக்கொள்ள மனிதர்களாலும், இயற்கை மற்றும் துஷ்ட சக்திகளாலும் எவ்வித ஆபத்தும் ஏற்படாது சர்வரக்ஷையாக விளங்கிக் காக்கும்.ரக்ஷையை அணியும் முன் மேற்சொன்ன மந்திரம் 3 தடவை ஜெபித்து அர்ச்சித்து பின் அணிந்து கொள்ளவும்.

4.பிறரால் செய்யப்பட திருஷ்டி,மந்திர யந்திரங்களால் உண்டான பாதிப்புகள் நீங்க, நோய்கள் ,பயம் நீங்க,சர்வ கார்யங்களிலும் வெற்றி பெற :

ஓம் நமோ ஹனுமதே ருத்ராவதாராய |
பர யந்திர மந்திர தந்திர த்ராடக நாசகாய |
சர்வஜ்வர சேதகாய சர்வ வியாதி நிக்ருந்தகாய |
சர்வ பய ப்ரசமனாய சர்வ துஷ்ட முக ஸ்தம்பனாய |
சர்வகார்ய சித்திப்ரதாய ராமதூதாய ஸ்வாஹா ||

மேற்சொன்ன பலன்கள் போக மேலும் சில காரியங்களுக்கும் இம்மந்திரம் பயன்படும்.எதிர்களுடன் வாக்குவாதம், வழக்குகளுக்கு செல்ல வேண்டிய சூழ்நிலையில் இடது கையில் ஒரு செம்பில் நீர் வைத்துக் கொண்டு இம்மந்திரத்தை 27 தடவை ஜெபித்து அந்த நீரால் முகம் கழுவிச் செல்ல வெற்றி கிட்டும்.

5.கெட்ட சக்திகளால் ஏற்பட்ட பாதிப்புகள் நீங்க :-

ஓம் நமோ ஹனுமதே ருத்ராவதாராய |
தேவ தானவ யக்ஷ ராக்ஷஸ பூத ப்ரேத பிசாச|
டாகினி சாகினி துஷ்ட க்ரஹ பந்தனாய ராமதூதாய
ஸ்வாஹா ||

அடிக்கடி பயந்து அல்லது கெட்ட கனவு கண்டு திடுக்கிட்டு எழுதல், உறக்கத்தில் ஏதோ ஒன்று அமுக்குவது போல் இருந்தால் இம்மந்திரத்தை மனதுக்குள் ஜெபிக்க அவை உடனே நீங்கும்.உங்களுக்கு படுபட்சி இல்லாத நல்ல நாளாகத் தேர்ந்தெடுத்து ஒரு நல்ல வெற்றிலையில் செந்தூரம் கொண்டு "ஹ்ராம்" என்று எழுதி இம்மந்திரத்தை 1008 உரு ஜெபித்து அந்த வெற்றிலையைச் சுருட்டித் தாயத்துக்குள் அடைத்து இடுப்பில் அணிந்து கொள்ள பூத,ப்ரேத,பிசாசு,துர்சக்திகளின் பாதிப்புகள் நிரந்தரமாக நீங்கும்.

தனி நபருக்கு இல்லாமல் ஒரு வீடு,கடை,தொழிற்சாலை போன்றவற்றுக்கு துஷ்ட சக்திகளால் பாதிப்பு என்றால் மேற்கண்ட வெற்றிலையை ஒரு சிகப்புத் துணியில் முடிந்து வீடு,கடை,தொழிற்சாலை வாசலில் கட்டி வைக்கவும்.

ஸ்ரீ ஹனுமன் உடல்கட்டு மந்திரம்

ஸ்ரீ ராம் ஜயராம் ஜயஜய ராம்
ஆஞ்சநேய ஆஞ்சநேய ஆஞ்சநேய பாஹிமாம் ||
ஹனுமந்த ஹனுமந்த ஹனுமந்த ரக்ஷமாம் ||

சாத்வீக மந்திரம் தவிர்த்த பிற வகையான ராஜச மற்றும் தாமச தெய்வ மந்திர உபாசனை மற்றும்

பூஜையின் போது எதிர்பாராத சில ஆபத்துக்கள் அல்லது துஷ்ட சக்திகளின் தாக்குதலுக்கு ஆளாகலாம்.அதைத் தவிர்க்க உடல் கட்டு மந்திரம் ஜெபித்த பின் மந்திர ஜபம் செய்வது பாதுகாப்பானது.

முதலில் ஊதுபத்தி ஏற்றி வெற்றிலைப் பாக்கு ,வாழைப்பழம் ,கொய்யாப்பழம் படைத்து முன்னால் ஒரு டப்பியில் விபூதி வைத்துக் கொண்டு மந்திரத்தை 1008 தடவை ஜெபித்துச் சித்தி செய்து கொள்ளவும்.பின்னர் தேவையான போது 3 தடவை ஜெபித்துச் சிரசிலும்,நெற்றியிலும், மார்பிலும் விபூதி அணிந்து கொள்ளக் காப்பாக விளங்கும்.குளக்கரை,நதிக்கரை,கடற்கரையில் மந்திரத்தைச் சித்தி செய்வது சிறப்பு.

உடற்கட்டுக்கு மட்டுமின்றி பயந்த குழந்தைகள் மற்றும் துஷ்ட சக்திகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் இந்த விபூதியைப் பூசி வர அவற்றின் பாதிப்புகள் நீங்கும்.இரவில் தனியாக உறங்கப் பயப்படுபவர்கள் இதை ஜெபித்து நெற்றியில் விபூதி பூசி உறங்கப் பயமற்ற உறக்கம் உண்டாகும்.

மந்திரம்:-

ஓம் நமோ பரமாத்மனே அஞ்சனாசுதாய |
ஹூம் ஹூம் ஹூம் மம சரீரம் பந்தனம் |
ரக்ஷ குரு குரு ஸ்வாஹா ||

உடல்பலம்,மனோபலம் பெற :-

சிலர் எதற்கெடுத்தாலும் உடனே அழுபவர்களாக, பயப்படுவர்களாக இருப்பார்கள்.மனபலம் இன்மையே இதற்குக் காரணம்.கீழே சொல்லியுள்ள பிரயோகத்தின் மூலம் அவர்களை மனோபலம் கொண்டவர்களாக மாற்ற முடியும்.

வளர்பிறை செவ்வாய்க்கிழமை விஷ்ணு அலல்து ஹனுமான் ஆலயம் சென்று அங்குள்ள ஆஞ்சநேயருக்குக் கொய்யாப்பழம் ,அச்சுவெல்லம், பழங்கள் படைத்து ஹனுமனை வழிபட்டு அர்ச்சகரிடம் ஹனுமனின் மேனியில் பூசிய செந்தூரம் கொஞ்சம் தருமாறு வேண்டி வாங்கி அதைக் கையில் வைத்துக் கீழே உள்ள மந்திரம் ஜெபித்து நெற்றியில் பூசி வர உடலில் மனதில் பலம் பெருகி எந்த ஒரு சூழ்நிலையையும் தைரியமாக எதிர் கொள்ளும் மனோநிலையை அடையப் பெறுவார்கள்.

மந்திரம் :-

" ஓம் ஹம் ஹனுமந்தாய வீரரூபாய நமஹ "

ஸ்ரீ ஹனுமான் பயவிமோசன மந்திரம் :-

அஞ்சனாகர்ப்ப சம்பூதாய கபீந்த்ரோ சர்வோத்தம |
ராமப்ரிய நமஸ்துப்யம் ஹனுமந் ரக்ஷ ரக்ஷ சர்வதா ||

இரவில் தூங்கும் போது துர்சக்திகள் பிடித்து அழுக்குவது,பயங்கர கனவு கண்டு விழித்துக்கொள்வது

,அமானுஷ்ய சத்தங்கள் காதில் விழுந்து பயப்படுதல் நீங்க செவ்வாய்க்கிழமை அன்று ஹனுமனுக்கு கொய்யாப்பழம்,வெற்றிலை,பாக்கு,பழங்கள்,உளுந்துவடை படைத்து முன்னால் விபூதி அல்லது செந்தூரம் வைத்து மேற்கண்ட மந்திரத்தை 108 தடவை ஜெபிக்கவும்.பின்னர் உறங்கும் முன் அந்த விபூதி அல்லது செந்தூரத்தை நெற்றி அணிந்து கொள்ள மேற்சொன்ன தீமைகள் ஏற்படாது.தினமும் இவ்வாறு செய்து வரவும்.

வீட்டில் பேய், பிசாசு,மந்திரங்களால் அல்லது தீய சக்திகளின் தொல்லை இருந்தால் இந்த மந்திரத்தைத் தேய்பிறை செவ்வாய்கிழமை (அன்று இப்பூஜையைச் செய்பவருக்குப் படுபக்ஷி நாளாக இருக்ககூடாது) ஹனுமனுக்கு கொய்யாப்பழம்,வெற்றிலை, பாக்கு,பழங்கள், உளுந்துவடை படைத்து முன்னால் ஒரு செம்பில் நீர் வைத்து அதில் கொஞ்சம் துளசி இலைகளைப் போட்டு ,விபூதி வைத்து மந்திரத்தை 1008 தடவை ஜெபம் செய்யவும்.ஜபம் முடிந்ததும் அந்த விபூதியை செம்பில் உள்ள நீரில் போட்டு அந்த தீர்த்தத்தை வீட்டின் உட்புறம் ,வெளிப்புறம்,வீட்டில் உள்ளோர் மீதும் வெற்றிலை கொண்டு தெளித்து விடவும்.இவ்வாறு 3 செவ்வாய்க் கிழமைகள் செய்ய எந்த துஷ்ட சக்திகளாலும் துன்பம் நேராது.

ஸ்ரீ ஹனுமத் சத்ரு ஜெய மந்திரம்

ஓம் நமோ பகவதே |
மஹாபலபராக்ரமாய |

மஹா விபத்தி நிவாரனாய |
பக்த ஜன மனோபீஷ்ட கல்பனா கல்பத்ருமாய |
துஷ்ட ஜன மனோரத ஸ்தம்பனாய|
பிரபஞ்சன ப்ராணப்ரியாய ஶ்ரீம்||

ஒரு தேய்பிறை செவ்வாய்க்கிழமை அன்று ஒரு செம்புப் பாத்திரத்தில் நீர் வைத்துக் கொண்டு கொய்யாப்பழம் ,வெற்றிலை பாக்கு ,பால்,பழங்கள் படைத்து இந்த மந்திரத்தை 1008 தடவை ஜெபிக்கவும். துளசிச் செடியின் வடக்கு பக்கம் வேரும் 3 வெற்றிலையும் சேர்த்து சிகப்பு நூலால் கட்டி செம்பில் உள்ள நீரால் கழுவி ஒரு சிகப்புத் துணியில் முடிந்து வீட்டு வாசலில் தொங்க விடவும்.மீதி நீரை வீடு முழுவதும் வீட்டில் உள்ளோர் மீதும் தெளித்து விடவும்.

இந்த மந்திரப்பிரயோகத்தைச் செய்தால் நமது மன விருப்பங்கள் நிறைவேறும்.எதிரிகளால் ஏற்படும் தீவினைகள் பலிக்காமல் நீங்கும்.பேய் ,பிசாசு மற்றும் தீய சக்திகள் வீட்டை அண்டாது.

இந்த மந்திரத்தை ஒரு செம்பு யந்திரத்தில் எழுதி பன்னீர்,பால்,பச்சைக் கற்பூரம் கரைத்த தீர்த்தம் மற்றும் பஞ்சகவ்யத்தால் அதைச் சுத்தி செய்து 1008 உரு மந்திரம் ஜெபித்துப் ப்ராண ப்ரதிஷ்டை செய்து புஷ்ப அர்ச்சனை செய்து தாயத்தில் அடைத்து அதை வாகனத்தில் தொங்க விட விபத்துகளில் இருந்து பாதுகாக்கப்படுவார்கள்.

உடலில் அணிந்து கொண்டால் எதிரிகளின் தீவினைகளாலோ தீய சக்திகளாலோ ஆபத்து நேராமல் காக்கும்.

ஸ்ரீ ஹனுமன் வழிபாடு

ஸ்ரீ ராம் ஜெயராம் ஜெய ஜெய ராம் ||
ஆஞ்சநேய ஆஞ்சநேய ஆஞ்சநேய பாஹிமாம்||
ஹனுமந்த ஹனுமந்த ஹனுமந்த ரக்ஷமாம் ||

ஸ்ரீ ஹனுமன் சிவ அம்சம் சிவனது வீரியத்தில் இருந்து தோன்றியவர் எனவே இவரது சஹஸ்ரநாமத்தில் " ருத்ர வீர்ய ஸமுத்பவாய " என்றொரு நாமம் உண்டு.

ஸ்ரீ ஹனுமான் சிவபெருமானின் 11 அவதாரங்களில் ஒருவர்(ஏகாதச ருத்ரர்களில்) .

ஸ்ரீ ஹனுமானை மகான்கள் ராமாயணம் என்ற பெரிய மாலையில் உள்ள ரத்தினம் என்று குறிப்பிடுகிறார்கள்.

ஸ்ரீ ஹனுமான் பிரம்மா சரஸ்வதி முதலான அனைத்து தெய்வங்களின் ஆசீர்வாதமும்,பல சிறப்பான சக்திகளும்,தன்மைகளும் கொண்டவர்.
இராமாயண காலத்தில் ராமாவதார நோக்கம் பூர்த்தி அடைந்த பின் ராமர் ,சீதா முதலானோர் விண்ணுலகம் செல்லும் போது ஸ்ரீ ஹனுமன் ஸ்ரீ ராமரிடம் நான் உங்கள் திருநாமத்தை ஜெபித்துக்கொண்டு இந்த மண்ணிலேயே இருந்து விடுகிறேன் எனக் கூறி என்றும் சிரஞ்சீவியாய் இருந்து வருபவர்.

ஸ்ரீ உச்சிஷ்ட கணபதி,ஸ்ரீ மஹா வாராஹியைப்போல் ஸ்ரீ ஹனுமனும் விரைந்து அருள் செய்பவர்.

மாந்திரீகத்தில் இவரைக் கட்ட முடியாது. இவரைக்கொண்டு நியாயமான மற்றும் நல்ல காரியங்களை மட்டுமே செய்ய முடியும்.

இவருக்குத் தன் பலம் தெரியாததால் இவரைப் போற்றித் துதிப்பவர்களுக்கு மற்ற தெய்வங்களை விடச் சிறப்பான அருளை வழங்குவார்.இதன் காரணமாகவே "ஸ்தோத்ரப்பிரியர்" என்று அழைக்கப்படுகிறார்.

எல்லாத் தெய்வங்களைப்போல இவருக்கும் 108,1008 **நாமங்கள் உள்ளன. இருந்தாலும் இவரது நாமங்களில் கீழ்க்காணும்** 12 **நாமங்கள் பிரசித்தி வாய்ந்தவை அவற்றைத் தினமும் அதிகாலையில் ஜெபித்து வருவது அவர் அருளை நிறைவாய்ப் பெற்றுத்தரும்.**

1.ஹனுமத் த்வாதச நாமங்கள் :-

ஹனுமான்
ஆஞ்சநேயன்
வாயுபுத்திரன்
மகாபலிஷ்டன்
ராமேஷ்டன்
அர்ஜுனசகன்
பிங்காக்ஷன்
அமிர்தவிக்ரமன்
சமுத்திரத்தைத் தாண்டியவன்
சீதாசோகவிநாசகன்
லக்ஷ்மணப்ராண ரக்ஷகன்
ராவணனின் கொழுப்பைப் பரிகாசம் செய்தவன்

தினமும் குளித்து முடித்து மேற்கண்ட இவரது பன்னிரு திருநாமங்களை ஜெபித்து வர இவர் அருளைப் பூரணமாகப் பெறலாம்.மேலும்,இந்த நாமங்களை யாத்திரையின் போதும்,ஆபத்தான தருணங்களிலும்,பயம் கொண்ட நேரத்திலும் ஜெபித்து வேண்டக் காவலாய் விளங்குவதோடு காரிய வெற்றியும் தரும்.

2. ஸ்ரீ ஹனுமான் ராம பக்தருள் சிறந்தவர். மேலும் இவர் தன்னை வணங்குபவர்களை விட ஸ்ரீ ராமரை வணங்கி அவர் நாமத்தைப் பாடுபவர்களுக்கு சிறப்பான பலன்களை நல்குவார்.எனவே .அதிகாலையில் குளித்த பின்னர் "ஸ்ரீ ராம் ஜெய ராம் ஜெய ஜெய ராம்" என்று குறைந்தது 27 தடவையும்,

அதிகமாக எவ்வளவு முடியுமோ அவ்வளவு ஜெபித்து வர இவர் அருளைப் பூரணமாகப் பெறலாம்.

3.ஆபத்தான தருணங்களில் கீழ்க்கண்ட ஸ்லோகத்தை ஜெபித்து அவரை வேண்ட ஆபத்துகள் விலகும்.

ஆஞ்சநேய ஆஞ்சநேய ஆஞ்சநேய பாஹிமாம்||

ஹனுமந்த ஹனுமந்த ஹனுமந்த ரக்ஷமாம் ||

4.பாதுகாப்பான பயணத்திற்கு :-

தொலைதூரப் பயணம் செல்கையில் வழியில் எந்த விதமான ஆபத்தும் ஏற்படாமல் இருக்கவும்,தனிமையில் பயணம் செய்யும் போது பயம்,ஆபத்து நீங்கவும்,அடிக்கடி வாகன விபத்துகளைச் சந்திப்பவர்களும் இந்த ஸ்லோகத்தை 3 தடவை ஜெபித்து ஸ்ரீ ஆஞ்சநேயரை வணங்கிய பின் வெளியில் கிளம்ப ஆபத்துகள், விபத்துக்கள் ஏற்படாது .

அபராஜித நமஸ்தேஸ்து நமஸ்தே ராமபூஜித |
பிரஸ்தானந்த கரிஷ்யாமி சித்திர்ப்பவது மே ஸதா||

காரிய சித்திக்கான ஸ்ரீ ஹனுமான் மந்திரங்கள்

1.ஆரோக்யமான வலிமையான உடலைப் பெற

ஓம் நமோ ஹனுமதே ருத்ராவதாராய | வஜ்ர தேஹாய |வஜ்ர நகாய |வஜ்ர முஹாய| வஜ்ர ரோம்னே |வஜ்ர

நேத்ராய|வஜ்ர தந்தாய |வஜ்ர கராய| வஜ்ர பக்தாய|ராம தூதாய ஸ்வாஹா||

2.எதிரிகள் நோய்கள் தீர

ஓம் நமோ ஹனுமதே ருத்ராவதாராய | சர்வ சத்ரு சம்ஹரணாய| சர்வ ரோகஹராய |சர்வ வசீகரணாய| ராம தூதாய ஸ்வாஹா||

3.மந்திர மாந்திரீகம் ,எதிரிகள்,த்ருஷ்டி,வியாதி ,பயம் நீங்க ,காரியன் சித்திக்க

ஓம் நமோ ஹனுமதே ருத்ராவதாராய | சர்வ யந்த்ர மந்த்ர தந்த்ர த்ராடக நாசகாய | சர்வ ஜ்வரச் சேதகாய|சர்வ வ்யாதி நிக்ருந்தகாய |சர்வ பய ப்ரசமனாய |சர்வ துஷ்ட முக ஸ்தம்பனாய|சர்வ கார்ய சித்திப்ரதாய | ராம தூதாய ஸ்வாஹா||

4. துர்தேவதைகளின் உபத்ரவம் நீங்க

ஓம் நமோ ஹனுமதே ருத்ராவதாராய |தேவ தானவ யக்ஷ ராக்ஷஸ| பூத பிரேத பிசாச |டாகினி சாகினி துஷ்ட க்ரஹ பந்தனாய | ராம தூதாய ஸ்வாஹா||

இந்த மந்திரத்தைச் செவ்வாய்க்கிழமை அன்று 1008 தடவை ஜெபித்து அந்த நீரை வீட்டில் தெற்குத் திசை தொடங்கி கடிகாரச் சுற்றில்,தென்மேற்கு,மேற்கு , ,வடமேற்கு ,வடக்கு,வடகிழக்கு,கிழக்கு ,தென்கிழக்கு என 8 திசைகளிலும் தெளித்துப் பின்னர் வீட்டின்

தலை வாசலிலும் தெளித்து அதன் பின்னர் வீட்டில் உள்ளவர்கள் மீதும் தெளித்துக் கொள்ள துஷ்ட சக்திகளின் உபத்ரவம் நீங்கும்.

5.மந்திரம்

ஓம் நமோ ஹனுமதே ருத்ராவதாராய | சர்வ க்ரஹான பூத பவிஷ்ய வர்த்தமானான் சமீப ஸ்தான் |சர்வ கால துஷ்ட புத்தி உச்சாடய உச்சாடய| பர பலானி க்ஷோபய க்ஷோபய|மம சர்வ கார்யானி சாதய சாதய ஸ்வாஹா||

இந்த மந்திரத்தை 108 முறை ஜெபித்து வர கெட்ட புத்தி நீங்கும்.தீய சக்திகளால் தீங்கு நேராது.ஒரு நபரை பார்த்தவுடன் சரியாக கணிக்க முடியும்.
சகல காரியமும் சித்தியாகும்.

செவ்வாய்க்கிழமை அல்லது வியாழக்கிழமை அன்று வெற்றிலை, பாக்கு, கொய்யாப்பழம்,பழங்கள் வைத்துத் தேவையான மந்திரத்தை 108 வீதம் வேண்டிய காரியம் நிறைவேறும் வரை ஜெபித்து வரவும்.

ஸ்ரீ ஸ்வப்ன வாராஹி மற்றும் வாராஹி தந்திரம்

ஸ்ரீ ஸ்வப்ன வாராஹி மந்திரம் வாராஹி மந்திரங்களில் சிரேஷ்டமான ஒரு மந்திரம்.
இந்த மந்திரத்தை சித்தி செய்து கொண்டால் ஸ்ரீ ஸ்வப்ன வாராஹி நம் கனவில் வந்து நம் பிரச்சனைகளுக்கு தீர்வு சொல்வாள்.

ஜெபமுறை :
ஓம் அஸ்ய ஸ்ரீ ஸ்வப்ன வாராஹி மந்த்ரஸ்ய| ஈஸ்வர ரிஷிஹி |ஜகதீச்சந்தஹ |ஸ்வப்ன வாராஹி தேவதா ||ஓம் பீஜம் |ஹ்ரீம் சக்தி|ட்டஹ ட்டஹ கீலகம் ||

மூல மந்திரம்:-

ஓம் ஹ்ரீம் நமோ வாராஹி || அகோரே ஸ்வப்னம் தர்ஷய ட்டஹ ட்டஹ ஸ்வாஹா ||

இதை வளர்பிறை பஞ்சமி திதி அன்றோ ,வளர்பிறை அஷ்டமி அன்றோ ஜெபிக்க ஆரம்பிக்க நன்று .
தினம் 1100 உரு வீதம் தொடர்ந்து 11 நாட்கள் படுக்கையில் அமர்ந்தவாறே ஜெபித்து அங்கேயே உறங்கி விட வேண்டும்.ஜெபித்த இடத்தில் மாதுளம்பழம்,செவ்வாழைப்பழம்,வெண்ணை எடுக்காத தயிர் சாதம் நிவேதனம் செய்யலாம்.

ஸ்ரீ வாராஹி வழிபாடு

கருணாசாகரி ஓம் ஸ்ரீ மகா வாராஹி பத்மபாதம் நமோஸ்துதே||

அன்னை ஸ்ரீ மகாவாராஹி ஸ்ரீ ராஜராஜேஸ்வரியின் பஞ்சபாணங்களில் இருந்து தோன்றியவள்.இவளே ஸ்ரீ ராஜராஜேஸ்வரியின் படைத்தலைவி (சேனாதிபதி).

ஸ்ரீ வாராஹி உபாசனை சிறந்த வாக்குவன்மை, தைரியம், தருவதோடு எதிர்ப்புகள்,எதிரிகளிடமிருந்து பாதுகாக்கும் கவசமாகும்.அபிச்சாரம் எனப்படும் பில்லி,சூனியம்,ஏவல்களை நீக்குவாள்.இவளை வழிபடுபவர்கள் எந்த மந்திரவாதிக்கும் அஞ்சத் தேவையில்லை.ஏதிரிகளின் வாக்கை, அவர்கள் செய்யும் தீவினைகளை ஸ்தம்பனம் செய்பவள்.வழக்குகளில் வெற்றி தருபவள்.

மந்திர சாஸ்திரபழமொழி :- "வாராஹிக்காரனோடு வாதாடாதே" .

ஸ்ரீ வாராஹி வாக்கு சித்தி அருள்வதில் ஸ்ரீ உச்சிஷ்ட கணபதியைப் போலவே முதன்மையானவள் .எனவே இவளை உபாசிப்பவர்கள் யாரையும் சபிக்கக்கூடாது அவை உடனே பலிக்கும் ஆனால் அதனால் பாதிப்படைந்தவரின் வேதனைக்கான பாவம் விரைவில் நம்மை வந்தே சேரும் அதில் இருந்து அன்னை நம்மைக் காக்க மாட்டாள்.எனவே எவருக்கும் அழிவு வேண்டி வணங்காமல் "எதிரிகளால் துன்பம் ஏற்படாமல் காக்குமாறு" வேண்டி வழிபட வேண்டும்.

ஸ்ரீ வாராஹி எலும்பின் அதி தேவதை இவளை வணங்க எலும்பு தொடர்பான வியாதிகளும்,வாத,பித்த வியாதிகளும் தீரும்.

ஸ்ரீ மகாவாராஹியை ஆக்ஞா சக்கரத்தில் தியானிக்க வேண்டு .

வழிபாட்டு முறைகள் :-

புதன்,சனிக்கிழமைகள்,திரயோதசி திதி,பஞ்சமி திதி,நவமி,திருவோண நட்சத்திரம் அன்றும் வழிபடலாம்.எல்லா மாதங்களிலும் வரும் வளர்பிறை அஷ்டமி அன்று வழிபட சிறப்பான பலன்களைப் பெறலாம்.

ஆடி மாதம் வளர்பிறையின் முதல் 10 நாட்கள் இவளின் நவராத்திரி அந்த நாட்களில் தினமும் அவளுக்கு விருப்பமான நைவேத்தியங்களுடன் பூஜிக்க வல்வினைகள் யாவும் தீரும் என்று மந்திர சாஸ்திர நூல்கள் கூறுகின்றன.

செல்வம் ,அரசியல் வெற்றி,பதவி,புகழ் வேண்டுவோர் பஞ்சமியிலும்,
மனவலிமை,ஆளுமை,எதிர்ப்புகளில் வெற்றியடைய அஷ்டமியிலும் சிறப்பாக வழிபடவேண்டும்.

எல்லா ஜெபங்களுக்கும் கிழக்கு நோக்கியும்,எதிர்ப்புகள் தீர தெற்கு நோக்கியும் அமர்ந்து ஜெபிக்கலாம்.

ஆலயங்களில் உள்ள ஸ்ரீ வாராஹி தேவிக்கு சிவப்பு நிற ஆடைகளை அணிவிக்க காரியத் தடைகள் நீங்கும்.

வெள்ளைப் பட்டு அணிவிக்க வாக்கு வன்மை ,கல்வியில் மேன்மை உண்டாகும்.

மஞ்சள் பட்டு அணிவிக்கக் குடும்பத்தில் மங்கள காரியங்கள் நடைபெறும்,திருமணத்தடை நீங்கும்.

பச்சைப் பட்டு அணிவிக்கச் செல்வப்பெருக்கு ஏற்படும்.

நீலவண்ணப் பட்டு அணிவிக்க எதிர்ப்புகளில் வெற்றி கிட்டும்.

ஸ்ரீ வாராஹி உபாசகர்கள் விளக்கிற்கு பஞ்சு,தாமரைத்தண்டு,வாழைத்திரி பயன்படுத்தலாம்.அதிலும் தாமரைத்தண்டு திரி மிகச் சிறந்தது.

நைவேத்தியங்கள்:-

தொலி எடுக்காத உளுந்து வடை,மிளகு சேர்த்த வெண்ணை எடுக்காத தயிர்சாதம்,மொச்சை ,சுண்டல்,சுக்கு அதிகம் சேர்த்த பானகம்,மிளகு சீரகம் கலந்து செய்த தோசை,நவதானிய வடை, குங்குமப்பூ, சர்க்கரை, ஏலம், லவங்கம்,பச்சைகற்பூரம் கலந்த பால்,கருப்பு எள் உருண்டை ,சர்க்கரை வள்ளிக்கிழங்கு,தேன் படைக்கலாம்.

மாதுளம்பழம் மிகச் சிறப்பு.

ஸ்ரீ மகா வாராஹியின் மூல மந்திரம்:-

ஓம் ஐம் ஹ்ரீம் ஸ்ரீம் ஐம் க்லௌம் ஐம் ||
நமோ பகவதி வார்த்தாளி வார்த்தாளி வாராஹி வாராஹி வாராஹமுகி வாராஹமுகி ||
அந்தே அந்தினி நமஹ|
ருந்தே ருந்தினி நமஹ|
ஜம்பே ஜம்பினி நமஹ|
மோஹே மோஹினி நமஹ|
ஸ்தம்பே ஸ்தம்பினி நமஹ|
சர்வ துஷ்டபிரதுஷ்ட்டானாம் சர்வேஷாம்
சர்வ வாக்சித்த சக்ஷுர் முககதி ஜிஹ்வா ஸ்தம்பனம் குரு குரு சீக்ரம் வச்யம்,ஐம் க்லௌம் ட்டஹ ட்டஹ ட்டஹ ட்டஹ ஹூம் அஸ்த்ராய ப்பட் ||

ஸ்ரீ மகாவாராஹியின் அங்க தேவதை -லகு வார்த்தாளி
உபாங்க தேவதை :-ஸ்வப்ன வாராஹி
பிரத்யங்க தேவதை :திரஸ்கரணி

ஸ்ரீ லகு வார்த்தாளி மூல மந்திரம் :-

லூம் வாராஹி லூம் உன்மத்த பைரவி பாதுகாப்யாம் நமஹ||

இவள் ஸ்ரீ மகாவாராஹியின் அங்க தேவதை ஸ்ரீ மஹாவாராஹி மந்திரம் ஜெபிக்க இயலாதவர்கள் லகு

வாராஹி மந்திரத்தை ஜெபித்து வரலாம்.இது எல்லா நிலைகளிலும் பாதுகாப்பாக விளங்கும்.

ஸ்ரீ ஸ்வப்ன வாராஹி மூல மந்திரம் :-

ஓம் ஹ்ரீம் நமோ வாராஹி கோரே ஸ்வப்னம் ட்ட: ட்ட: ஸ்வாஹா||

அல்லது

ஓம் ஹ்ரீம் நமோ வாராஹி அகோரே ஸ்வப்னம் தர்சய ட்ட: ட்ட: ஸ்வாஹா||

இவள் ஸ்ரீ மகாவாராஹியின் உபாங்க தேவதை.இவளை உபாசனை செய்தால் நமக்கு வரும் நன்மை,தீமைகளைக் கனவில் வந்து அறிவித்து நம்மைக் காப்பாள்.இம்மந்திரத்தை நியமங்களுடன் உறங்கும் முன் 11 நாட்கள் தொடர்ந்து தினமும் 1100 முறை ஜெபித்து வந்தால் 11 நாட்களுக்குள் அன்னை ஸ்ரீ ஸ்வப்ன வாராஹி கனவில் வந்து நம் மன விருப்பங்களை நிறைவேற்றி ,பிரச்சனைகளைத் தீர்ப்பாள்.இவளுக்குப் பிடித்த நைவேத்யம் இளநீர்.

ஸ்ரீ திரஸ்கரணி மூல மந்திரம் :-

ஓம் நமோ பகவதி திரஸ்கரணி மஹாமாயே| மஹாநித்ரே|சகலபசுஜன மனஸ் சக்ஷு ச்ரோத்ரம் திரஸ்கரணம் குரு குரு ஸ்வாஹா||

இவள் மாயைக்கு அதிபதி .இவளை வழிபட மாயை நீங்கும்.மனகுழப்பங்கள் தீரும்.

குறிப்பிட்ட காரியங்களுக்கான ஸ்ரீ வாராஹி மந்திரங்கள் :-

1.வாக்கு வன்மை,சபைகளில் பேர் பெற,கல்விஞானம் பெற:-

ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் நமோ வாராஹி|
மம வாக்மே ப்ரவேஸ்ய வாக்பலிதாய||

2.எதிரிகளால் தீமை ஏற்படாதிருக்க :-

ஓம் சத்ருசம்ஹாரி| சங்கடஹரணி| மம மாத்ரே |ஹ்ரீம் தும் வம் சர்வாரிஷ்டம் நிவாரய|சர்வ சத்ரூம் நாசய நாசய ||

3.செல்வவளம் பெருக:-

க்லீம் வாராஹமுகி |ஹ்ரீம் சித்திஸ்வரூபிணி |ஸ்ரீம் தனவசங்கரி தனம் வர்ஷய ஸ்வாஹா||

4.சர்வ சித்திகளும் செல்வமும் பெற :-

ஸ்ரீம் பஞ்சமி சர்வசித்திமாதா| மம கிரகம் மே தனசம்ருத்திம் தேஹி தேஹி நம||

5.எல்லா வகையான பயமும் நீங்க :-

ஓம் ஹ்ரீம் பயங்கரி| அதிபயங்கரி|ஆச்சர்ய பயங்கரி| சர்வஜன பயங்கரி|சர்வ பூதப் பிரேத பிசாச பயங்கரி |சர்வ பயம் நிவாரய சாந்திர்ப்பவது மே சதா||

6.வறுமை நீங்க :-

ஓம் ஸ்ரீம் க்லீம் ஹ்ரீம் நம: மம மாத்ரே வாராஹி தேவி மம தாரித்ரியம் த்வம்சய த்வம்சய||

ஸ்ரீ மகாவாராஹியின் பன்னிரு திருநாமங்கள்:-
மேற்கண்ட மந்திரத்தை ஜெபிப்பவர்கள்,ஜெபிக்க இயலாதவர்கள் யாவரும் கீழ்க்காணும் ஸ்ரீ மஹாவாராஹியின் 12 நாமங்களைக் காலையில் குளித்து முடித்ததும் சொல்லி வணங்க அவள் அருள் துணை நிற்கும்.

1.பஞ்சமி
2.தண்டநாதா
3.சங்கேதா
4.சமயேச்வரி
5.சமயசங்கேதா
6.வாராஹி
7.போத்ரிணி
8.சிவா
9.வார்த்தாளி
10.மகாசேனா
11.ஆக்ஞா சக்ரேச்வரி
12.அரிக்னீ

ஸ்ரீ வாராஹி மாலையில் உள்ள பாடல்கள் யாவும் மிகுந்த மந்திர சக்தி உடையவை .சமஸ்கிருத மந்திரங்களை உச்சரிக்கத் தெரியாதவர்களும், மற்றும் யாவரும் நலம் பெற வேண்டி ஸ்ரீ வாராஹி மாலையில் உள்ள 32 பாடல்களையும் தினம் படித்து வரலாம்.அல்லது அதில் உள்ள ஒவ்வொரு பாடலும் ஒரு குறிப்பிட்ட பலனைத்தரும் அதில் உங்கள் தேவைக்கான பாடலை மட்டும் தேர்ந்தெடுத்துத் தினமும் படித்து வரத் தேவை நிச்சயம் நிறைவேறும்.

காரியசித்தி ஏற்பட,பயம் நீங்க மற்றும் பல காரியங்களுக்கும் சிறப்பு பூஜை,யந்திர,மந்திர,ஹோமம் ,ரக்ஷை, உள்ளது .ஸ்ரீ அச்வாரூடா , ஸ்ரீ அபராஜிதா மந்திரங்கள் ,அரசாங்க காரியங்களில் வெற்றி தருவதுடன் ,எத்தகைய வழக்கு, எதிர்ப்புகளையும் தீர்க்கும் .பதிப்பின் நீளம் கருதி இத்துடன் ஸ்ரீ மஹாவாராஹி உபாசனை பற்றிய விளக்கத்தை நிறைவு செய்கிறேன்.

வராஹி உபாசனை பல நன்மைகளையும் ,உடனடி பலனையும் தருவது.இதில் பல பிரயோக ரகசியங்கள் உள்ளன.எனவே, முறைப்படி சாப நிவர்த்தி செய்து தீக்ஷை பெற்று ஜெபிப்பது உத்தமம்.

கருணாசாகரி ஓம் ஸ்ரீ மஹா வாராஹி பத்மபாதம் நமோஸ்துதே||

வாராஹி வாராஹி வாராஹி பாஹிமாம்||
வார்த்தாளி வார்த்தாளி வார்த்தாளி ரக்ஷமாம் ||

ஜைனர்களின் காவல் தெய்வம் ஸ்ரீ கண்டாகர்ண மஹாவீர் வழிபாடு

கண்டாகர்ண மஹாவீர் ஜைனர்களின் (சேட்) காவல் தெய்வம்.ஜைன மதத்தின் 52 காவல் தெய்வங்களில் இவர் 30 வது தெய்வமாக வருகிறார்.இவர் மணியோசையை விரும்புபவர்.மணிபோன்ற காது உடையவர். எதிரிகளால், தீய சக்திகளால் ஏற்படும் எந்த விதமான கஷ்டங்களில் இருந்தும் விடுபட இவரை வழிபடலாம்.இவர் வழிபாடு விரைவில் பலிதமாவதுடன் அற்புதமான பலன்களையும் தரும். அசைவம் சாப்பிடுபவர்களுக்கு இவரது மந்திரம் பலிக்காது. அதிகமாக உருவேற்றினால் காட்சி தருவார் அத்துடன் வாழ்வில் நடக்கப்போகும் பல சம்பவங்கள் முன்கூட்டியே கனவில் தெரிந்து விடும்.

கோதுமை மாவு,நெய் கலந்து செய்யப்படும் இனிப்புப் பலகாரம் இவருக்குப் பிரியமானது.முடியவில்லையானால் பூந்தி அல்லது லட்டு படைக்கலாம்.

1. ஸ்ரீ கண்டாகர்ணர் மற்றும் ஸ்ரீ லக்ஷ்மி தேவியின் அருளும் ஒன்றாகச் சேர்த்துத் தரும் விருப்பங்களை நிறைவேற்றும் மந்திரம் :-

நாமன் த்ரோஸ்தி தே சித்தஹா சர்வ மங்களகாரகா||இஷ்ட சித்திம் மஹா சித்திம் ஜெயம் லக்ஷ்மீம் விவர்தய ||

வளர்பிறை வெள்ளிக்கிழமை மாலை இந்த மந்திரம் ஜெபிக்கத் தொடங்கி
தினமும் 108 தடவை ஜெபித்து வர பிரச்சனைகளற்ற,வளமான வாழ்வு கிட்டும்.

2.வியாதிகள், விபத்துகள்,பயம் நீங்க :-

ஓம் ஹ்ரீம் ஶ்ரீம் க்லீம் |கண்டாகர்ண மகாவீர் |சர்வ வியாதி வினாசக|ஆதிம் வ்யாதிம் விபத்திம் ச மஹாபீதிம் வினாஷய ||

தினம் 108 உரு ஜெபித்து வர வியாதிகள்,பயம்,விபத்துக்களில் இருந்து பாதுகாப்பு கிட்டும்.ஜாதகப்படி வியாதிகள்,விபத்துக்கள் உண்டாகக் கூடிய அமைப்பு உள்ளவர்கள் இம்மந்திரத்தை 108 உரு ஜெபித்துச் சிகப்புக் கயிற்றில் ரக்ஷை முடிந்து கட்ட வியாதிகள்,விபத்துக்கள் ஏற்படாது.

3.எதிரிகளையும் தீய எண்ணம் கொண்ட மனிதர்களையும் வெற்றி கொள்ள :-

த்வச் ச்ரத்த பக்தி யோகேன பவந்து சர்வ சக்த்யஹா ||பரபவன் து துஷ்டாஸ்ச்ச சத்ரவோ வைரி துர்ஜனா ||

செவ்வாய்க்கிழமை காலை 6 முதல் 7 மணிக்குள் அல்லது மதியம் 11:45 முதல் 12:30 க்குள் இந்த மந்திரத்தை ஜெபித்து வர எதிரிகளாலும் தீய எண்ணம் கொண்ட மனிதர்களாலும் துன்பம் நேராது காக்கப்படும்.

4.கொடிய வியாதி,மனக்குழப்பம் ,பெருந்துன்பங்கள் தீர :-

ஆபத் காலேஷு மாம் ரக்ஷ மம புத்திம் ப்ரகாசய |சர்வோ பத்ரவதோ ரக்ஷ கோர ரோகம் வினாசய ||

மனக்குழப்பம் ,பெருந்துன்பங்கள் உள்ள வேளையில் இம்மந்திரத்தை வடக்கு முகமாக அமர்ந்து ஜெபித்து வர அதில் இருந்து விடுபடும் வழி மனதில் புலப்படும். கொடிய வியாதியால் அவதிப்படுபவர்கள் இம்மந்திரத்தை வடக்கு முகமாக அமர்ந்து ஜெபித்து வர விரைவில் நோயின் தீவிரம் குறையும்.

5.உடல் மன பலம்,செல்வவளம்,புத்திக்கூர்மை பெற:-

ஓம் ஹ்ரீம் ஸ்ரீம் க்லீம் |கண்டாகர்ண மஹாவீர் | தன சம்ரித்திம் ப்ரவர்த்தய |
ராஜ்யம் ச ராஜ்யமானம் ச பலம் புத்திம் ப்ரவர்த்தய ||

வட இந்தியர்கள் இம்மந்திரத்தை அதிகம் ஜெபித்து பெரும் செல்வந்தர்களாக விளங்குகிறார்கள்.கடை அல்லது தொழிற்சாலையைத் தினமும் திறக்கும் பொழுது அல்லது ஊதுபத்தி காண்பித்து இம்மந்திரத்தை ஜெபிக்க செல்வம் பெருகும்.தொழில்,வியாபாரம் செழிக்கும்.எப்படிச் செல்வத்தைப் பெருக்கலாம் என்ற புத்திசாலித்தனம் உண்டாகும்.வெள்ளிக்கிழமை சுக்ர ஹோரையில் இம்மந்திரத்தை ஜெபிக்கத் தொடங்கவும்.
இன்னும் இவர் தரிசனம் பெற ,காணாமல் போன பொருள் ,இழந்த செல்வம் திரும்பப்பெற,பேய்,பிசாசு ,தீய சக்திகளின் தொல்லை தீர எனச் சில மந்திரப்

பிரயோகங்கள் உள்ளன,பதிவின் நீளம் கருதி இத்துடன் நிறைவு செய்கிறேன்.

கனவில் தீர்வுகள் சொல்லும் ஸ்ரீ ஸ்வப்ன சக்ரேஸ்வரி மந்திரம்

இதை ஒரு அமாவாசை அன்று ஜெபிக்கத் தொடங்கவும்.ஒரு புது விளக்கு வாங்கி (அகல் விளக்கு அல்லது எந்த விளக்கு வேண்டுமானாலும் பயன்படுத்தலாம்.) அதில் தாமரைத் தண்டு திரி போட்டு விளக்கேற்றி இம்மந்திரத்தை வடக்கு நோக்கி அமர்ந்து ஜெபித்து வரவும். குறைந்தது 108 தடவை அதிகபட்சமாக எவ்வளவு வேண்டுமானாலும் ஜெபிக்கலாம் .மந்திர ஜெபத்தின் எண்ணிக்கை கூடக்கூடச் சிறப்பான பலன் கிடைக்கும். 90 நாட்கள் ஜெபித்து வரவும்.ஜெபம் செய்யும் முன் விளக்கின் அருகில் ஒரு செம்பில் கொஞ்சம் பச்சைக்கற்பூரம் அல்லது ஒரு ஏலக்காய் போட்டு நீர் வைக்கவும்.ஜபம் முடிந்ததும் அந்த நீரைக் குடித்து விடவும். அவரவரது பூர்வ ஜென்ம புண்ணிய பலனைப் பொருத்துச் சிலருக்கு முன் பின்னாகப் பலிக்கும்.

முதல் நாள் பச்சைக் கற்பூரம், தேங்காய்த் துருவல்,ஏலக்காய் போட்டுக் காய்ச்சிய பால், வெற்றிலை,பாக்கு, பழங்கள், பலகாரங்கள் வைத்து ஜெபிக்கவும்.மல்லிகை,பிச்சி அல்லது தாமரை இதழ்களால் மந்திரத்தை 27 தடவை ஜெபித்து விளக்கின் பாதத்தில் பூவைச் சமர்ப்பிக்கவும்.

அடுத்து வரும் நாட்களில் வாழைப்பழம், கற்கண்டு மட்டுமாவது படைக்கவும்.அசைவம் தவிர்க்கவும்.

முதல் நாளைப் போல் 90 வது நாளும் சிறப்பாக நைவேத்யம் படைத்து பூஜிக்கவும்.

ஸ்ரீ ஸ்வப்ன சக்ரேஸ்வரி தேவி மந்திரம் :-
ஓம் நம ஸ்வப்ன சக்ரேஸ்வரி |
ஸ்வப்னே அவதர அவதர |
கதம் வர்த்தமானம் கதய ஸ்வாஹா ||

இஷ்ட தெய்வம் மற்றும் குலதெய்வத்துடன் பேச,தரிசிக்க உதவும் மந்திரம்

இம்மந்திரம் பல தாந்த்ரீகர்கள்,ஜோதிடர்கள் மற்றும் யோகிகளால் பயன்படுத்தப்படுகிறது.

இம்மந்திர ஜெபத்தின் பயனாக நமக்கு விருப்பமான தேவதையின் (இஷ்ட தெய்வம்,குலதெய்வம்) தரிசனம் கனவில் கிடைக்கும்.சில நாட்களில் அந்த தெய்வத்தோடு பேசி நம் விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம்.மேலும் உறங்கும் முன் ஏதேனும் ஒன்றை கனவில் காண வேண்டுமென்றால் ஊதுபத்தி ஏற்றிச் செம்பில் தண்ணீர் வைத்துக் கொண்டு இன்ன காரியம் அறியவேண்டும் என்று சங்கல்பம் செய்து 108 தடவை மந்திரம் ஜெபித்து செம்பில் உள்ள தீர்த்தத்தைக் குடித்து உறங்கினால் வேண்டியது கனவில் வெளிப்படும்.

சனிக்கிழமை காலை அல்லது இரவில் ஆரம்பிக்கலாம்.ஸ்வப்நேச்வரி தேவியின் படத்தை பிரேம் செய்து முன்னால் வைத்துக் கொள்ளவும். வீட்டை அல்லது பூஜை அறையை பச்சைக் கற்பூரம் கலந்த நீரால் சுத்தம் செய்யவும்.பின்னர் நெய் விளக்கேற்றி பூக்களால் விளக்கை அர்ச்சனை செய்து ,சாம்பிராணி,குங்கிலியம் போட்டு கற்பூரஆரத்தி காட்டவும்.வெள்ளை விரிப்பு விரித்துக் கிழக்கு முகமாக அமரவும்.தினமும் குறிப்பிட்ட ஒரே எண்ணிகையில் ஜெபம் செய்து 45 முதல் 90 நாட்களுக்குள் 51000 உரு மந்திரம் ஜெபித்து முடிக்க மந்திரம் சித்தியாகும்.

(45 நாட்கள் என்றால் 44 நாட்களுக்கு 1133 எண்ணிக்கையும் 45 வது நாள் 1148 உரு ஜெபித்து பூஜையை முடிக்கவும்.)

(90 நாட்கள் என்றால் 89 நாட்களுக்கு 566 எண்ணிக்கையும் 90 வது நாள் 626 உரு ஜெபித்து பூஜையை முடிக்கவும்.)

மந்திரம் :-

ஓம் ஹ்ரீம் விசித்திர வீர்யம் ஸ்வப்னே இஷ்ட தர்ஷய நமஹா||

ஸ்ரீ ஸ்வப்ன காளி மந்திரம்

ஞாயிற்றுக்கிழமை அல்லது செவ்வாய்க்கிழமை இரவு 10:00 மணிக்கு மேல் பூஜையைத் தொடங்கவும்.தாமரைத்தண்டுத் திரி போட்டு

விளக்கேற்றி வெற்றிலை, பாக்கு, பழங்கள், பூக்கள், குங்குமம் படைத்துக் கரும்புள்ளி இல்லாத ஒரு எலுமிச்சம்பழத்தை நாலு துண்டுகளாக நறுக்கி அதில் குங்குமம் தடவி விளக்கின் முன் வைத்து மந்திரம் ஜெபிக்கத் துவங்கவும்.முதல் நாளும் 21 வது நாளும் சிறப்பாகப் பூஜை செய்து பாயசம் படைக்கவும்.தினமும் 351 தடவை 21 நாட்களுக்குத் தொடர்ந்து ஜெபித்தால் மந்திரம் சித்தியாகும். பின்னர் நம் மனதில் தோன்றும் குழப்பங்கள் மற்றும் எந்தக் கேள்விக்கும் உறங்கும் முன்னர் ஊதுபத்தி ஏற்றி இந்த மந்திரத்தை 108 தடவை ஜெபித்துக் காளிதேவியை வேண்டி உறங்கக் கனவில் நம் கேள்விக்கான விடை கிடைக்கும்.

குறிப்பு:-
முதல் நாள் மந்திரம் ஜெபிக்கும் முன் கீழ்க்கண்ட மந்திரம் ஜெபித்து ரக்ஷை அணிந்து கொண்டு ஜெபம் தொடங்கவும்.
ஓம் க்ரீம் பத்ரகாள்யை ஏஹிஏஹி மகாதேவி பாதுகாப்யம் தயாநிதே || என்று 7 தடவை ஜெபித்து ஒரு கறுப்புக் கயிற்றில் 7 முடிச்சுப் போட்டு அதை வலது கையில் கட்டிக் கொள்ளவும்.

ஸ்ரீ ஸ்வப்ன காளி மந்திரம்

காளி தேவி நமஸ்துப்யம் சர்வ காமார்த்த சாதிகே |
மம சித்தமசித்தம் வா ஸ்வப்னே சர்வ ப்ரதர்ஷய ||

துன்பங்கள் தீரக் கனவில் தீர்வு தரும் ஸ்ரீ ஸ்வப்நேஸ்வரி மந்திரம்:-

வாழ்க்கையில் நமக்கும் நம்மைச் சேர்ந்தவர்களுக்கும் அநேகம் பிரச்சனைகள் வரும் போகும்.ஆனால் ,இக்கட்டான சில சூழ்நிலைகளில் ,நமக்கு என்ன செய்து அதை தீர்ப்பது என்று தெரியாமல் குழம்பி ஜோதிடரையோ ,குறி சொல்பவரையோ (அவர்களில் பெரும்பாலானவர்கள்MONEY MINDED) நாடிச் சென்று பெரும் பணத்தை வீணாக செலவு செய்தும் பிரச்சனை தீர்ந்த பாடில்லை என சொல்வோர் ஏராளம்.

இந்த ஸ்வப்நேஸ்வரி மந்திரத்தை தினம் உறங்கும் முன் குறைந்தது 108 எண்ணிக்கை 90 நாட்கள் ஜெபித்து வரவும்.அருகில் ஒரு செம்பில் கொஞ்சம் தண்ணீர் வைத்துக்கொள்ளவும்.முதல் நாளும் 90ஆவது நாளும் மட்டும் வெற்றிலை, பாக்கு,அவல்,பழங்கள் ,பால்,பன்னீர்,பாயசம் வைத்து ஜெபிக்கவும்.மற்ற நாட்களில் முடிந்ததை அல்லது கல்கண்டும் பாலும் படைத்து ஜெபித்து வரவும்.

தவறான மனிதர்கள்,மந்திரவாதிகளின் தொடர்பு உங்கள் சூக்ஷும உடலில் கீழான சக்கரங்களை இயங்கச் செய்து உங்களை தவறான நடத்தை உள்ளவராக மாற்றிவிடும்.இந்த மந்திர ஜெபத்தின் மூலம் உங்கள் பிரச்சனைகளுக்கு நீங்களே தீர்வு கண்டு கொள்ளலாம்.

ஓம்||
க்ரீம் க்ரீம் க்ரீம் ஹ்ரீம் ஹ்ரீம் ||
ஸ்வப்நேஸ்வரி ||
ஹ்ரீம் ஹ்ரீம் க்ரீம் க்ரீம் க்ரீம் ||
ஓம் ||

இந்த மந்திரத்தை ஜெபித்து வரும் நாட்களில் அருகில் ஒரு பேப்பர் ,பேனா வைத்துக்கொள்ளவும்.இரவில் கனவில் ஏதேனும் தேர்வினை அம்பாள் கூறினால் அதை குறித்து வைத்துக்கொண்டு பயன்படுத்தவும்.இதனால் எந்தத் தீங்கும் ஏற்படாது பயமின்றிச் செய்து பயன் பெறுங்கள்.

ஸ்ரீ உச்சிஷ்ட மகா கணபதி தந்திரம் (தாந்த்ரீக முறை)

ஸ்ரீ வித்யா தந்திரம் எனும் ஸ்ரீ லலிதா திரிபுரசுந்தரி / தாய் வாலை பரமேஸ்வரி உபாசனையின் முதல் படிநிலையான ஸ்ரீ உச்சிஷ்ட மகா கணபதி தந்திரம் (தாந்த்ரீக முறை)

உச்சிஷ்டம் என்றால் என்ன ?

உச்சிஷ்டம் மிச்சம் அல்லது எச்சம் . இந்த உலகில் படைக்க பட்ட அனைத்தும் அழிகின்றன ஆனால் முழுமையாக அழிகின்றனவா என்றால் உண்மையில் இல்லை என்பது தான் உண்மை. அனைத்திலும் ஒன்று மிச்சம் இருக்கும்.

இந்த உலகம் அழியும் பொழுதும் மூன்று வஸ்துகளாகிய நிலம் நீர் நெருப்பு இந்த மூன்றில் ஒன்று மிச்சம் இருக்கும். இந்த மூன்றில் ஒன்றாலேயே உலகமும் அழியும். இப்படி ஆக்கலும் அழித்தலும் ஒன்றாய் நிற்கும் சக்தியே உச்சிஷ்டம் அவரே உச்சிஷ்ட கணபதி என அதர்வ வேதம் கூறுகிறது.

சிலர் இவரை உக்கிரமான கணபதி என்பர் ஒரு சிலர். உச்சிஷ்டம் என்பதை உக்கிரம் என்று தவறாக புரிந்து கொண்டு அப்படி சொல்வர் . படைத்தல் காத்தல் அழித்தல் என்ற மூன்று வஸ்துக்களும் இணைந்த ஒரு சக்தியே உச்சிஷ்டம் . மூன்றும் முடிவில் நிலை பெறுவது உச்சிஷ்டத்திலேயே .

சிவன் பிரம்மா விஷ்ணு என்ற மூன்று சக்தியின் முத்தொழிலையும் உடையவர். மாந்த்ரீகம் மற்றும் ஜோதிடர்களுக்கு முக்காலத்தையும் உணர வைப்பவர்.

சரியாக ஜோதிடம் கற்காதவர்கள் கூட உச்சிஷ்ட உபாசனை மூலம் நல்ல சரியான பலனை கூற முடியும்.

வாக்கு ஸித்தி கிட்டும். அதனால் சொன்னது சொன்னபடி நடந்தேறும்.

மாந்த்ரீகத்தில் இவரை கொண்டு செய்ய முடியாத காரியங்களே இல்லை.

உச்சிஷ்ட கணபதி மந்திரம்

இதில் 9 அக்ஷரம் 12 அக்ஷரம் 31, 41 என பல அக்ஷர மந்திரங்கள் உண்டு.

எந்த மந்திரம் நமக்கு ஏற்றது என்பதை நமது பூர்வ புண்ணியமும் குருவின் ஆசியுமே முடிவு செய்யும். எல்லாரும் எல்லா அக்ஷரங்களையும் பயன்படுத்த முடியாது. உச்சிஷ்ட கணபதி உபாசனை எல்லாராலும் செய்ய முடியாது அதற்கு என தனியாக ஜாதக அமைப்பு உண்டு, புதன் கேது தொடர்பு, கேது நிற்கும் இடம் பொறுத்து தான் உச்சிஷ்ட கணபதி உபாசனை சித்தி அளிக்கும். அதே போல சித்த உடல் அமைப்பு கொண்டவர்கள் அதாவது முழங்காலில் மச்சம் அமைப்பு கொண்டவர்கள் உபாசனை செய்ய மிக விரைவில் சித்தி ஆகும்.

ஸ்ரீ வித்யா உபாசன தீட்க்ஷை குருகுல குருவின் மூலம் பெறும் அன்பர்களுக்கு எந்த நிபந்தனைகளும் இல்லை என்கிறது ஆகமங்கள். ஏனெனில் பூர்வ புண்ணிய பாக்கியத்தை பொறுத்தே ஸ்ரீ வித்யா உபாசன தீட்க்ஷை கிட்டும். அதுவும் குருவின் தயை இருந்தால் மட்டுமே.

வேறு எவருக்கும் தலை கீழ் நின்றாலும் உச்சிஷ்ட கணபதி சித்தி ஆகாது. இந்த ஒரு பூஜை மட்டும் முழுக்க முழுக்க பூர்வ புண்ணிய பாக்கியத்தை பொறுத்தே அமையும். ஏன் என்றால் இது மிக விசேஷமானது. அஷ்ட கர்மங்களும் ஆடலாம் இதனால். மிக பெரிய வசியத்தை கொடுக்கும்.

உச்சிஷ்ட கணபதி உபாசகரை சுற்றி எந்நேரமும் மக்கள் சுற்றி கொண்டே இருப்பார்கள். இவர்கள் செய்யும் அனைத்து அஷ்டகர்மங்களும் சித்தி ஆகும். முக்காலம் உணரும் தன்மை உண்டாகும்.

அதர்வண வேதத்தில் பின் வருமாறு கூறப்படுகிறது. உதாரணமாக

சூதாட்டத்தில் ஈடுபடுவோர் கூட இந்த உபாசனை செய்து மந்திரம் ஜெபித்து விளையாட வெற்றி கிடைக்கும்.

ஆற்று நீரை எடுத்து வந்து 37 முறை ஜெபித்து பின்பு அந்த நீரால் முகம் கழுவி செல்ல காண்போர் அனைவரும் வசியமாவார்.

ஏதாவது தீராத கஷ்டம் வந்தால் வெள்ளெருக்கு, வேப்பம் குச்சி இதில் கணபதி பதுமை செய்து சிவப்பு

சந்தனம் அல்லது செம்மலர் கொண்டு பூஜித்து அதை கல் பாத்திரத்தில் வைத்து பூமியில் ஒரு கையளவு கீழே புதைத்து அதன் மீது பகலும் இரவும் மந்திரம் ஜெபித்து வந்தால் ஒரு வாரத்தில் சகல பீடையும் ஒழியும், சத்ருக்கள் வசியமாவார். தன தான்யம் வந்து குவியும்.

இவரை கொண்டு ஆகாத காரியமில்லை மாந்த்ரீகருக்கு இவர் ஒன்றே போதும் இவரை வைத்தே சகல காரியங்களும் செய்யலாம். முன்பிறவியில் மாந்த்ரீக சித்த முறையில் அல்லது அந்த வம்சா வழியில் வந்தவருக்கு மட்டுமே இது சித்திக்கும் என்பார்கள் சிலர்.

மேலும் உச்சிஷ்ட கணபதி மந்திரங்களை தகுந்த பயிற்சி செய்த சீடர்களுக்கும் தனது வாரிசுகளுக்கும் மட்டுமே கொடுக்க வேண்டும் பிறருக்கு கொடுக்கலாகாது என்கிறது “கணேச கல்ப சூத்திரம்” எனும் நூல்.

தாரா தேவி / நீல சரஸ்வதி:

உச்சிஷ்ட கணபதியின் மடியில் இருப்பவர் தஸ மஹா வித்யாவின் இரண்டாம் வித்தையின் நாயகி லாமாஸ் என்று திபெத்திய மொழியில் அழைக்கப்படும் ஸ்ரீ தாரா தேவி எனும் நீல சரஸ்வதி ஆகும். மிக அழகிய உருவத்தில் காணப்படுவார்.

இவளுடைய ஒரே ஒரு மந்திரம் அஷ்டகர்மங்களையும் செய்யும் ஆற்றல் உடையது ஆகும். மந்திரம் தான் ஒன்று, ஆனால் பல காரியங்களை செய்யும். மந்திர

ஜெபம் செய்யும் பொழுது தாரா தேவியை எந்த நிறத்தில் தியானிக்கிறோமா அந்த காரியம் நடக்கும்.

1. சகல வசியம் – வெள்ளை

2. ஆகர்ஷணம் – பச்சை – பண வரவு

3. மோகனம் – மஞ்சள் – சொர்ணாகர்ஷணம், தனாகர்ஷணம்

4. ஸ்தம்பனம் – சிவப்பு

5. உச்சாடனம் – சாம்பல்- பேய் பிசாசு பூத மற்றும் எதிரிகள் உச்சாடனம்

6. மாரணம் – கருமை – பேய், நோய்,பூத, மனித மாரணம் மற்றும் தீய காரியங்கள் செய்ய

மேற்கண்டபடி நமக்கு எந்த காரியம் தேவையோ அந்த நிறத்தில் தாராவை தியானிக்க வேண்டும்.

மறைக்கபட்ட உச்சிஷ்டகணபதி மந்திரம்:

ஒரு சொல் உச்சிஷ்ட கணபதி மந்திரம் முதல் 9 அக்ஷரம் 12 அக்ஷரம் 31, 41 என பல அக்ஷர மந்திரங்கள் உண்டு. இதுமறைக்கபட்டது,

தந்த்ர தாந்திரீக வழிபாடுகள்:

உச்சிஷ்ட கணபதி சித்தி செய்தவர்கள் மட்டுமே இந்த பூஜை செய்ய வேண்டும் . சக்தி உபாசன பூஜை (ஸ்ரீ

வித்யா / வாலை பூஜை) நிச்சயம் செய்ய வேண்டும். ஏற்கனவே உச்சிஷ்ட கணபதி சித்தி செய்தவர்களிடம் மந்திரம் உபதேசம் பெற்று செய்து கொள்ளலாம்.

மாந்த்ரீக மற்றும் ஜோதிடர்களுக்கு மிக அருமையான பூஜை முறை இது. அஷ்ட கர்மங்கள் செய்யவும், ஜன வசியம், தொழில் வசியம் செய்யவும் உகந்தது. வேண்டிய காரியம் சீட்டில் எழுதி உச்சிஷ்ட கணபதி மற்றும் சக்தி தேவியை பூஜித்து வேண்டி கொள்ள எந்த காரியமானானாலும் நடக்கும். நியாய தர்மம் அறிந்து செயல்படவும்

இவரது வழிபாடு முழுக்க தாந்த்ரீகம் சார்ந்தது இவரை தந்த்ர கணபதி என்றும் சொல்வார்கள்.

வெள்ளெருக்கு வேரில் செய்த விநாயகர் சிலையை அருகம்புல்லால் மந்திரம் உச்சரிப்பு செய்ய செய்ய மந்திரம் உரு ஏறும். இந்த மந்திரத்தை தொடர்ந்து ஜெபித்து வர சகல சௌபாக்கியங்களும் ஏற்படும்.

நல்ல மணம் உள்ள மலர்களை கையில் வைத்து கொண்டு உத்திஷ்ட கணபதி மந்திரம் ஜெபித்து உச்சிஷ்ட கணபதியை வணங்க அனைத்து வல்லமைகளும் உடனேயே கிடைக்கும்.

வெளிப்படையாய் சொல்லக் கூடாத பல ரகசியப் பிரயோக முறைகளும், மந்திரங்களும், ஜெப முறைகளும் இவரது வழிபாட்டில் உள்ளது. ஸ்ரீ குருவானவர் பரம, பரமேஷ்டி குருவின் தயையுடன் தமது சீடர்களுக்கு தகுந்த நேரத்தில் உபதேசம் செய்வார்கள்.

ஸ்ரீ உச்சிஷ்ட கணபதி – முன்னுரை

இன்றைய சவாலான உலகில் சமூகத்தில் உள்ள முரட்டுக் கூறுகளால் பல மக்கள் மிகுந்த சிரமங்களையும், துரதிர்ஷ்டவசமான சூழ்நிலைகளையும் எதிர்கொள்கின்றனர். பக்தியுள்ளவர்கள், நேர்மையானவர்கள் மற்றும் கடின உழைப்பாளிகள் கூட தப்புவதில்லை. அவர்கள் தங்கள் பிரச்சினைகளைத் தணிக்க அல்லது தவிர்க்க கடவுளின் உதவியை நாட வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். அந்த கடினமான காலங்களில், கோவில்கள் போன்ற வழிபாட்டுத் தலங்களில் நாம் பிரார்த்தனை செய்கிறோம், மேலும் அர்ச்சகர்களின் சேவையை நாடி புனித ஸ்தலங்களில் பல்வேறு சடங்குகளைச் செய்கிறோம், சில சமயங்களில் சில தந்திரிகள், குருக்கள் போன்றவர்களின் சேவைகளுக்கு பணம் செலவழிக்கிறோம். கர்மவினைப் பலன்கள் கடுமையானதாக இருந்தால், மேலே உள்ள எல்லாவற்றிலிருந்தும் நாம் பெரும்பாலும் எந்த முடிவுகளையும் பயன்களையும் பெறுவதில்லை, மேலும் நாம் நம்பிக்கையையும் கடவுள் நம்பிக்கையையும் கூட இழக்க நேரிடுகிறது.

பிரபஞ்சத்தின் உருவாக்கம், வாழ்வாதாரம், மாற்றம், கலைத்தல் மற்றும் பொழுதுபோக்குதல் ஆகியவற்றின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக, விவரிக்க முடியாத அனைத்தையும் உள்ளடக்கிய பிரபஞ்ச சூப்பர்-உணர்வு, உன்னதமான பரபிரம்மம் பல்வேறு வடிவங்களில் உருவாகிறது. பிரம்மத்தின் இந்த உயர்ந்த வடிவங்கள்

பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றன. அத்தகைய ஒரு பெயர்களில் ஒன்று விநாயகர். விநாயகப் பெருமான் அனைத்துத் தடைகளையும் அகற்றி, அனைத்து நோக்கங்களையும் நிறைவேற்ற வெற்றியைத் தரும் தெய்வீக பிரபஞ்ச சக்தியாக சித்தரிக்கப்படுகிறார். விருப்பங்களை நிறைவேற்றுவதற்காக விநாயகப் பெருமானின் ஆசீர்வாதத்தைப் பெற பல்வேறு வேத மந்திரங்கள் உள்ளன. அவற்றில் பெரும்பாலானவை பக்தி புத்தகங்கள் மற்றும் வலைத்தளங்களில் கிடைக்கின்றன, மேலும் அவை வெற்றியை உறுதி செய்வதற்காக அனைத்து கோவில்களிலும் சடங்குகளிலும் பயன்படுத்தப்படுகின்றன.

நமது பகவான் கணேசருக்கு பல வடிவங்கள் உள்ளன, அவருடைய பதினாறு வடிவங்களில் மிகவும் போற்றப்படும் வடிவம் ஸ்ரீ உச்சிஷ்ட கணபதி என்று அழைக்கப்படுகிறது. வாமாசார மார்கத்தைப் பின்பற்றும் தாந்த்ரீகர்கள் மற்றும் சாதகர்கள், ஸ்ரீ வித்யா உபாசகர்கள் அல்லது அன்னை லலிதா தேவி வழிபாட்டின் ஸ்ரீ வித்யா உபாசனை வழியைப் பின்பற்றுபவர்களுக்கு முதன்மையான தெய்வம் மற்றும் முதல் உபாசனை தீட்க்ஷை ஸ்ரீ உச்சிஷ்ட கணபதி தந்திரம் மற்றும் அவரது கவசம் மந்திரம் ஆகும்.

கவசத்தை பாராயணம் செய்வதற்கு முன் சடங்குகள், பிரார்த்தனைகள், தூய்மை, உணவு கட்டுப்பாடுகள், பிரம்மச்சரிய பிரமாணம் போன்றவை எதுவும் தேவை இல்லை. தேவைப்படுவது உண்மையான நம்பிக்கை மற்றும் அர்ப்பணிப்பு. அத்தகைய இரகசியமான மற்றும் மிகவும் மரியாதைக்குரிய பிரார்த்தனையைப்

படிப்பதன் மூலம் கிடைக்கும் நன்மைகளை தவறாகப் பயன்படுத்த வேண்டாம். இத்தகைய சடங்குகள் இல்லாதது, சடங்கு வேதம் அல்லது வலது கைப் பாதையைப் பின்பற்றுபவர்களிடையே அனுகூலமின்மைக்கு காரணமாக இருக்கலாம். ஒருவரின் கர்மவினை மற்றும் பிரார்த்தனையின் நேர்மையின் அடிப்படையில் முடிவுகள் பலன்கள் மாறுபடும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். இது முடிவுகளைக் காட்ட வாரங்கள், மாதங்கள் அல்லது சில சந்தர்ப்பங்களில் ஆண்டுகள் கூட ஆகலாம். சிரமங்கள் தொடர்ந்து நீடித்து, நிவாரணம் கிடைக்கவில்லை என்றால், ஒருவர் உச்சிஷ்ட கணேச சஹஸ்ரநாம பாராயணத்தையும் தொடரலாம். நேரம் அனுமதித்தால், தகுதியான குருவிடம் தீட்சை பெற்ற பிறகு, உச்சிஷ்ட கணேச மந்திர ஜப சாதனாவை தொடரலாம்.

அன்றாட வாழ்வில் சிறிது நேரம் கூட ஒதுக்காமலுள்ள நம்மில் பெரும்பாலோர், இந்த ஜெபத்தை ஏற்று, உச்சிஷ்ட விநாயகப் பெருமானை 'எப்பொழுதும் பாதுகாத்து, ஆசீர்வதித்து, வழிகாட்டி, இறுதியில் நம்மை மோக்ஷம் அல்லது ஆன்மீக விடுதலை மற்றும் சுய-உணர்தல் பாதைக்கு அழைத்துச் செல்ல பிரார்த்திப்போம்.' சம்பிரதாயங்களில் கைதேர்ந்தவர்களும், சிறிதளவு அல்லது எதற்கும் ஆசைப்படுபவர்கள், மிக விரைவாகவும் பலன்களை பெறுகிறார்கள். உச்சிஷ்ட கணேச பகவான் நமக்கு உகந்ததை அருளட்டும்.

Form / வடிவம்

உச்சிஷ்ட மகா கணபதி என்பது விநாயகரின் மிகவும் அரிதான வடிவம் மற்றும் கணபதியின் 32 முக்கிய வடிவங்களில் ஒன்றாகும். விநாயகரின் இந்த வடிவம் பாதுகாப்பிற்காகவும், வாழ்வில் ஏற்படும் சூட்சும தடைகளை தகர்த்துவதற்காகவும், ஐந்து புலன்களின் மீது கட்டுப்பாட்டைப் பெறுவதற்காகவும் வழிபடப்படுகிறது. பெரும்பாலும் வாமாச்சர மரபில் வழிபடப்படும் தாந்த்ரீக சடங்குகள் விரைவான பலனைப் பெறுகின்றன என்பதை நாம் அறிவோம். (மறைக்கப்பட்ட இரகசிய மந்திர சடங்குகள்).

உச்சிஷ்ட கணபதி அடர் நீல நிறத்தில் ஆறு கைகளுடன், மாதுளம் பழம், வீணை, மலர், நெல், ருத்ராட்ச மாலை மற்றும் கயிறு ஆகியவற்றை ஏந்தியிருக்கிறார். அவரது இடது மடியில் நீலாதேவி எனும் தாரா தேவி அமர்ந்திருக்கிறாள்

நீலகல்ப சூத்ரானியின் படி உச்சிஷ்ட கணபதியை வழிபடுவதால் கிடைக்கும் பலன்கள்

ஸ்ரீ உச்சிஷ்ட கணபதியை வழிபடுவதால் ஐந்து புலன்களைக் கட்டுப்படுத்தவும், செல்வச் செழிப்பு பெறுவதற்கும் வழிவகுக்கம்.

கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என மூன்று காலங்களையும் அறியலாம்.

வாக்கு பலிதம் உண்டாகும்.

மிகப்பெரிய ஜோதிட ஜாம்பவான்கள் அனைவரும் உச்சிஷ்ட மஹா கணபதி உபாசகர்களே ஆவர்.

வேலைவாய்ப்பு மற்றும் செல்வச் செழிப்பு ஏற்படும்.

செய்தொழிலில் தடைகளைத் தகர்த்து தொடர்ந்த வருமானம் உண்டாக்கும்.

வசீகர சக்தி கூடும் மற்றும் காதலில் வெற்றி உண்டாகும்.

உங்கள் விருப்பப்படி திருமணம் நடைபெறும், திருமணத் தடைகள் நீங்கும்.

தம்பதிகளிடையே சிறந்த தாம்பத்திய உறவும், அந்தரங்கம் (தாம்பத்யம்) சம்பந்தப்பட்ட அனைத்து குறைகளையும் நிவர்த்தி செய்யும்.

ஸ்ரீ உச்சிஷ்ட மகா கணபதியின் மந்திர சித்தியானது மற்ற அனைத்து தெய்வங்களையும் வெகு சுலபமாக சித்தி செய்யும்.

மறைக்கப்பட்ட தாந்த்ரீக தந்திர உபாசனை பலன்கள் முழுவதும் பெற இவ்வழிபாடு மிகவும் முக்கியமானது

உச்சிஷ்ட கணபதி மந்த்ரங்கள்

1) 6 எழுத்துக்களை கொண்ட மந்த்ரம்.
" வக்ரதுண்டாய ஹும் " ஷடங்க ந்யாஸ செய்து. ஒரு சதுர்த்தியிலிருந்து மறு சதுர்த்திவரை ஆறு லட்சம் ஜபம் செய்து. கற்கண்டு, வறுத்த மா, வாழைப்பழங்கள், அவல், இஞ்சி விதைகள், இனிப்பான இறைச்சி, தேங்காய், வறுத்த தானியங்கள் இவை எட்டும் ஆஹுதியாக போட்டு 60 ஆயிரம் மந்த்ரம் ஹோமம் செய்ய, எல்லா துன்பங்கள் நீங்கும். ஏழ்மை முற்றிலும் விலகும்.

உணவை நெய்யில் தோய்த்து ஹோமம் செய்ய செல்வமுண்டாகும்.

மேலே சொன்ன எட்டு பொருட்களுடன் சீரகம், வெள்ளை குங்கிலியம், மிளகு இவைகளை ஆஹுதியாக போட்டு, ஹோமம் செய்ய இரண்டு வாரத்தில் ஸாதகர் குபேரனாவான்.

ஒவ்வொரு நாளும் 444 தர்பணம் செய்ய ஒரு மண்டலத்தில் ஸாதகருக்கு என்னென்ன ஆசைகளிருக்கோ அவைகளை அடைவான்.

2) 31 எழுத்துக்களை கொண்ட மந்த்ரம்.
" ராயஸ்போஷஸ்ய ததிதா நிதிதோ ரத்னதாதுமான் ரக்ஷோஹணோ பலகஹனோ வக்ரதுண்டாய ஹும் " 5, 3, 8, 4, 5, 6. ஷடங்க ந்யாஸ செய்து. லட்சம் ஜபித்து, மேலே சொன்ன எட்டு பொருட்களுடன் சீரகம், வெள்ளை குங்கிலியம், மிளகு இவைகளை

ஆஹூதியாக போட்ட வண்ணம், பத்தாயிரம் ஹோமம் செய்ய, புதையல் கிடைக்கும். செல்வமதிகரிக்கும்.

3) 6 எழுத்துக்களை கொண்ட மந்த்ரம்.
" மேதோல்காய ஸ்வாஹா " ஷடங்க ந்யாஸ செய்து. லட்சம் ஜபித்து, மேலே சொன்ன எட்டு பொருட்களுடன் சீரகம், வெள்ளை குங்கிலியம், மிளகு இவைகளை ஆஹூதியாக போட்ட வண்ணம், பத்தாயிரம் ஹோமம் செய்ய, விருப்பங்கள் நிறைவேறும்.

4) 9 எழுத்துக்களை கொண்ட உச்சிஷ்ட கணபதி மந்த்ரம்.
" ஹஸ்தி பிசாசிலிகே ஸ்வாஹா " 2, 3, 2, 2, 2. பஞ்சாங்க ந்யாஸ செய்து. ஒரு லட்சம் ஜபித்து, இஞ்சி விதை ஆஹூதியாக போட்ட வண்ணம், பத்தாயிரம் ஹோமம் செய்ய, ஸித்தி கிடைக்கும்.

சிகப்பு சந்தன மரக் கட்டை அல்லது வெள்ளெருக்கு மரக் கட்டையில் ஸாதகர் தன்னுடை பெருவிரல் அளவு கணபதியின் உருவம் செய்து. அதை தேனில் குளிப்பாட்டி. சாப்பிட பின் வாயை கழுவாமல் இருந்து கொண்டு. சதுர்த்தி தேய்பிறையிலிருந்து சதுர்த்தி வளர்பிறை வரை பாயாசம், மதுர நைவேத்தியமாக வைத்து ஒரு லட்சம் மந்த்ரம் ஜபம் செய்து. இஞ்சி விதையை போட்ட வண்ணம் பத்தாயிரம் ஹோமம் செய்ய, ஸாதகர் அரச குலத்தில் பிறந்தானோ இல்லையோ கண்டிப்பாக இரு வாரத்துக்குள் ராஜ்யம் கிடைக்கும்.

சிலையின் உருவம் - களிமண்ணில் செய்தால் ராஜ்யம் கிடைக்கும்.

எறும்பு புற்று மண்ணில் செய்தால் லாபங்களுண்டாகும், ஆசைகள் நிறைவேறும்.

மதுதூலி, மதுர கொண்டு செய்தால் சகல சௌபாக்கிங்களும் கிடைக்கும்.

உப்பு கொண்டு செய்தால் எதிரி வசியமாவான்.

வேப்ப மரத்தினால் செய்தால் எதிரி அழிந்து போவான்.

வறுத்த தானியங்கள் தேன் கொண்டு செய்தால் மூன்று லோகமும் வசியமாகும்.

சாப்பிட்ட பின் தன் வாயை கழுவாமல் படுக்கையில் படுத்த வண்ணம் மந்த்ரத்தை ஜபம் செய்து கருத்த கடுகின் பூக்களை, கடுகு எண்ணெயில் தோய்த்து ஹோமம் செய்ய எல்லா எதிரிகளும் வித்வேஷணமாவர்.

சூது, பந்தயம், விவாதம், சண்டையின் போது மந்த்ரத்தை ஜபிக்க வெற்றியுண்டாகும்.

ஸாதகர் சிகப்பு நிற உடையணிந்து சிவப்பு, சந்தனம் திலகமிட்டு வெற்றிலையை மென்று கொண்டு அல்லது இறைச்சி கறியிலுள்ள இறைச்சியை மென்று கொண்டு மந்த்ரத்தை ஜபித்து. இறைச்சி கறி, பழங்கள்,

வெற்றிலை நைவேத்தியமாக வைத்து. பலி கொடுக்க மந்த்ரம். பலி மந்த்ரம்: "கம் ஹும் க்லௌம் க்லௌம் உச்சிஷ்ட கணேசாய மஹாயக்ஷாயாயம் பலிஃ".

5) 11 எழுத்துக்களை கொண்ட மந்த்ரம்.
" ஓம் கம் ஹஸ்தி பிசாசிலிகே ஸ்டவாஹா " 2, 3, 2, 2, 2. பஞ்சங்க ந்யாஸ.

6) 19 எழுத்துக்களை கொண்ட மந்த்ரம்.
" ஓம் நமோ உச்சிஷ்ட கணேசாய ஹஸ்தி பிசாசிலிகே ஸ்வாஹா " 3 7 2 3 2 2. ஷடங்க ந்யாஸ.

7) 37 எழுத்துக்களை கொண்ட மந்த்ரம்.
"ஓம் நமோ பகவதே ஏகதம்ஷ்ட்ராய ஹஸ்திமுகாய லம்போதராய உச்சிஷ்டமஹாதமனே ஆம் க்ரோம் ஹ்ரீம் கம் கே கே ஸ்வாஹா " 7, 10, 5, 7, 4, 4. ஷடங்க ந்யாஸ செய்து. கணபதி அவனுடைய நிர்வாணமாக இருக்கும் சக்தியை புணர்ந்து கொண்டு இருப்பது போன்று தியானம் செய்து. ஒரு லட்சம் மந்த்ரம் ஜபித்து, பத்தாயிரம் ஹோமம் செய்ய ஸித்தியாகும்.

எட்டாம் திதி தேய்பிறையிலிருந்து பதின்நான்கம் திதி தேய்பிறை வரை 8500 மந்த்ரம் ஜபம் செய்து. 850 மந்த்ரம் ஹோமம் செய்து. தர்பணம் செய்ய செல்வம், தானியங்கள், மனைவிகள், மகள்கள், மகன்கள், பேத்தி, பேரன், சகல சௌபாக்கியம், இணையற்ற மதிப்பும் கிடைக்கும்.

வேப்பமர கட்டையில் உருவம் செய்து ப்ராணப்ரதிஷ்டை செய்து. மந்திரத்தை ஜபம் செய்ய, தெய்வம் ஸாதகருக்கு அடிமை போல் ஸாதகரின் கட்டுப்பாட்டில் வரும்.

ஆற்றில் கொஞ்ச தண்ணீரெடுத்து அதற்கு இருபத்தியேழு தடவை ஜபித்து அதில் முகத்தை கழுவி நீதிமன்றத்துக்கு செல்ல ஸாதகரை பார்ப்பவர்களெல்லாம் அடுத்த கனமே வசியமாவர்.

அரசனை வசியம் செய்ய, ஸாதகர் 4000 ஊமத்தை பூவால் ஹோமம் செய்ய வேண்டும்.

ஸாதகர் பெண்ணின் இடது காலடி மண்ணை எடுத்து கணபதியின் சிலைக்கு கீழ் வைத்து. அந்த பெண்ணை தியானம் செய்தபடி மந்த்ரத்தை ஜபிக்க அவள் ஸாதகரிடம் வருவாள், அதி தூரத்திலிருந்தாலும் கூட.

உருவ சிலையை வெள்ளெருக்கு அல்லது வேம்பில் செய்து. ப்ராணப்ரதிஷ்டை செய்து. சிகப்பு பூக்கள் சந்தனத்தால் சதுர்த்தியில் வழிபட்டு. அன்று இரவு ஆயிரம் தடவை மந்த்ரம் ஜபம் செய்து, ஆற்றங்கரையில் வீசி எறிய கணபதி கனவில் வந்து ஸாதகரின் ஆசைபட்ட பொருட்களை எப்படி அடைவது என்று கூறுவான்.

வேப்பங்குச்சிகளை வைத்து ஹோமம் செய்ய, எதிரிகள் உச்சாடனமாவர்.

வஜ்ரிகுச்சிளை வைத்து ஹோமம் செய்ய, எதிரி யமலோகம் போவான்.

குரங்கு எழும்புத் துண்டை எடுத்து மந்த்ரீத்து எதிரி வீட்டில் போட உச்சாடனமுண்டாகும்.

மனித எழும்புத் துண்டை எடுத்து மந்த்ரீத்து பெண் வாழும் வீட்டில் போட, ஸாதகர் அவளை அடைவான்.

களிமண், பெண்ணின் இடது காலடி மண்ணையுமெடுத்து சிலை செய்து பெண்ணின் பெயரை சிலையின் நெஞ்சில் எழுதி. வேப்பங்குச்சியையும் சிலையையும் மந்த்ரீத்து. வேப்பங்குச்சியையும், சிலையையும் நிலத்தில் புதைத்து வைக்க. அந்த பெண் பைத்தியமயவாள். இந்த இரண்டையும் வெளியே எடுக்க பைத்தியம் அகலும்.

மேற் சொன்னதை வெள்ளைப்பூண்டை எடுத்து செய்ய எதிரி பைத்தியமாவான்.

சிலையை தட்டில் வைத்து எதிரி வீட்டில், வாயிற் கதவு உள்ள இடத்தில் புதைத்து வைக்க எதிரி உச்சாடனமாவன்.

உருவ சிலை வெள்ளெருக்கு அல்லது வேம்பில் செய்து. சிகப்பு பூக்கள் சந்தனத்தால் அலங்கரித்து. மது நிறம்பிய சிறு பானையை எடுத்து அதன் மேல் சிலையை வைத்து இரண்டையும் குழி தோண்டி புதைத்து, அதன் மேலிருந்து கொண்டு பகல் இரவாக ஜபம் செய்ய, சிரமங்கள் சகலதும் ஒரு கிழமைக்குள்

நீங்கும். எல்லா எதிரிகளும் வசமாவார்கள். செல்வமதிகரிக்கும், சொத்துக் கூடும்.

அடங்காத பெண்ணைவசியம் செய்தல் - அந்த பெண்ணின் இடது காலடி மண்ணை எடுத்து, அதை ஸாதகர் தன் மூத்திரம், உடலில் பல பாகங்களிலிருந்து ஊத்தையை எடுத்து, களிமண் எடுத்து இவைகளை கொண்டு சிலை செய்து. சிலையை மது உள்ள பானைக்குள் வைத்து மந்த்ரீத்து ஒரு கை அளவு (23cm) ஆழத்தில் புதைத்து. அதன் மேல் செவ்வளரி பூவை போட்ட வண்ணம் ஹோமம் செய்ய. ஸாதகருக்கு அப் பெண் அடிமையாவாள்.

8) 32 எழுத்துக்களை கொண்ட மந்த்ரம்.
" ஓம் ஹஸ்தி முகாய லம்போதராய உச்சிஷ்ட மஹாதமனே ஆம் க்ரோம் ஹ்ரீம் க்லீம் ஹ்ரீம் ஹூம் கே கே உச்சிஷ்ட ஸ்வாஹா " 6, 5, 7, 6, 6, 2. ஷடங்க ந்யாஸ செய்து. நான்கு லட்சம் ஜபம் செய்து. நாற்பதாயிரம் மந்த்ரம் மேற் சொன்ன எட்டு பொருட்களுடன், மோதகம், தேன் சேர்த்து ஆஹுதியாக போட்ட வண்ணம் ஹோமம் செய்து. தர்பணம் செய்ய ஸித்தி கிடைக்கும்.

சமைத்த உணவை நெய்யில் தோய்த்து ஹோமம் செய்ய ஒரு வருடத்துக்குள் ஏராளமான உணவு, தானியங்கள் கிடைக்கும்.

பாயாசம், தயர், கற்கண்டு ஆஹுதியக போட்ட வண்ணம் ஹோமம் செய்ய மகிமையும் அதிஷ்டமும் கிடைக்கும்.

வாழைப்பழம், தேங்காய், அவல் ஆஹுதியக போட்ட வண்ணம் ஹோமம் செய்ய செல்வம் கிடைக்கும்.

உப்பு, தேன், மோதகம் ஆஹுதியக போட்ட வண்ணம் ஹோமம் செய்ய ஆழகிகளின் மனதை கொள்ளை கொள்ளலாம். அரசனும் வசமாவான்.

9) 32 எழுத்துக்களை கொண்ட ஸர்வ ஜன வசிய மந்த்ரம்.
" ஓம் ஶ்ரீம் கம் ஸௌம்யாய கணபதயே வரவர்த ஸர்வ ஜனம் மே வசமாணய ஸ்வாஹா " ஷடங்க ந்யாஸ செய்து. நான்கு லட்சம் ஜபம் செய்து. நாற்பதாயிரம் மந்த்ரம் வில்வமர குச்சிகளை வைத்து ஹோமம் செய்ய ஸித்தி கிடைக்கும்.

மந்த்ரத்தில் "ஸர்வஜனம்" என்ற சொல்லை நீக்கி விட்டு 'த்ரிலோகம்" என்ற சொல்லை வைத்து, அசோக மர குச்சிகளை வைத்து ஹோமம் செய்ய மூன்று லோகமும் வசியமாகும்.

பாயாசம் ஆஹுதியாக போட்ட வண்ணம், செங்கருங்காலி குச்சிகளை வைத்து ஹோமம் செய்ய அரசன் வசமாவான். மதிப்பும், அதிஷ்டமும் கிடைக்கும்.

10) ஸர்வ ஜன வசிய மந்த்ரம்.
" வக்ரதுண்டாய தம்ஸ்த்ராய க்லீம் ஹ்ரீம் ஶ்ரீம் கம் கணபதே வரவரத ஸர்வ ஜனம் மே வசமாணய ஸ்வாஹா " 12 4 5 4 6, 2. ஷடங்க ந்யாஸ. நான்கு

லட்சம் மந்த்ரம் ஜபம் செய்து. கற்கண்டு, வறுத்த மா, வாழைப்பழங்கள், அவல், இஞ்சி விதைகள், இனிப்பான இறைச்சி, தேங்காய், வறுத்த தானியங்கள் இவை எட்டையும் போட்டுக் கொண்டு 4o ஆயிரம் மந்த்ரம் ஹோமம் செய்ய ஸித்தி கிடைக்கும்.

தாமரை பூக்களை ஆஹுதியாக உபயோகித்து ஹோமம் செய்ய அரசனும் அவனுடைய மந்திரிகளும் வசமாவார்கள்.

அத்தி மரக் குச்சிகளை வைத்து ஹோமம் செய்ய அரசர்கள் வசமாவர்.

தேன் ஆஹுதியாக போட தங்கம் சேரும்.

பசும்பால் ஆஹுதியாக போட பசு சேரும்.

தயிர் ஆஹுதியாக போட செழிப்பு உண்டாகும்.

11) 32 எழுத்துக்களை கொண்ட ஜனங்களின் மனதை ஸ்தம்பனம் செய்யும் ஹரித்ராகணபதி மந்த்ரம்.
" ஓம் ஹூம் கம் க்லௌம் ஹரித்ராகணபதி வரவரத ஸர்வஜன ஹ்ர்ரிதயம் ஸ்தம்பய ஸ்தம்பய ஸ்வாஹா " 4, 8, 5, 7, 6, 2. ஷடங்க ந்யாஸ. நாற்பதாயிரம் மந்த்ரம் ஜபம் செய்து மஞ்சளுடன் தானியங்கள் கலந்து 4 ஆயிரம் மந்த்ரம் ஹோமம் செய்ய ஸித்தி கிடைக்கும்.

சதுர்த்தி வளர் பிறையில் ஒரு பெண்ணால் ஸாதருக்கு மஞ்சள் பூசப்பட்டு, பின்னர் குளித்துவிட்டு கணபதியை

வழிபட்டு தர்பணம் செய்து 1008 மந்த்ரத்து ஜபம் செய்து. வறுத்த தானியங்கள், மோதகம், நெய் கொண்டு ஹோமம் செய்ய ஸாதகருக்கு நல்ல மனைவி அமைவாள். பெண்ணாயிருந்தால் நல்ல கணவன் அமைவான்.

இந்த மந்த்ரத்தில் முறையாக ஸித்தி பெற்றல் நீர், நெருப்பு, திருடர்கள், சிங்கம், ஆயுதங்கள், எதிரிகளின் வாய் ஸ்தம்பனமாகும்.

குருவருளே திருவருள்

குருவருளால் அனைத்தும் நிகழும்

<u>நன்றி வணக்கம்</u>